Registered as a Newspaper பக்கங்கள் 4 விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி Peoples Daily

நாதம் 04 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஐப்பசி 15 (31 - 10 - 1993) ஞாயிற்றுக்கிழமை ஓசை 255

நல்லூர் கிளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

## ஆயுர்வேத வைத்தியர் ஆங்கில மருந்து வழங்கத் தடை

ஆயுர்வேத வைத்தியர்கள் மேற்கத்தைய மருந்துகளை கொடுப்பதற்கு தடை வரும் என்று சுகாதார மகளிர் விவகார அமைச்சர் ரேணுகா ஹேரத் தெரிவித்துள்ளார். மேற்கத்தைய சிகிச்சையில் தராதரம் பெற்ற வைத்தியர்களைத் தவிர வேறு வைத்தியர்கள் நோயாளிகளுக்கு இந்த மருந்துகளை கொடுப்பதற்கு விரைவில் தடை வரும் என்றும் ஆயுர்வேத வைத்தியர் இந்த மருந்துகளை வழங்குவதால் பக்க விளைவுகள் வரும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். இவ்வாறு ஆயுர்வேத வைத்தியர்களும் மேற்கத்தைய வைத்தியத்தில் தராதரம் பெறாதோரும் ஆங்கில மருந்துகளை தாராளமாக கொடுப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது எனவும் இதனால் பல ஆபத்துக்கள் ஏற்பட்டுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# கடற்படை தள நிர்மாணிப்பில் பெருந்தொகை பணம் மோசடி

## ஜனாதிபதிக்கும் தொடர்பு?

(கொழும்பு)

**திருக்கோணமலை துறைமுகத்தில் புதிதாக அமைக்கப்பட்டுவரும் கடற்படைத்தள நிர்மாணிப்பில் பெருமளவு பணமோசடி இடம் பெற்றிருக்கலாம் எனவும் இப்பண மோசடியில் சிறிலங்கா ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கவிற்கு தொடர்பு உள்ளதா என்பது குறித்து சந்தேகம் எழுந்துள்ளதாகவும் கொழும்பு பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. இக்கடற்படைதள நிர்மாணிப்பு தொடர்பாக விசாரணை செய்யவென நியமிக்கப்பட்ட குழுவிற்கு ஜனாதிபதி தரப்பிலிருந்து பெரும் முட்டுக்கட்டை போடப் படுவதாகவும் இதனால் இச் சந்தேகம் எழுந்துள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.**

இது குறிதது மேலும் தெரிவிக்கப்படுவதாவது;

திருக்கோணமலைத் துறை முகத்தில் புதிதாக அமைக்கப்பட்டுவரும் கடற் படைத் தளம் தொடர்பாக எழுந்துள்ள ஊழல் குற்றச் சாட்டுக்கள் குறித்து விசாரணை செய்வதற்காக அமைக்கப்பட்ட குழுவில் ஜனாதிபதியின் தலையீடு அதிகமாக உள்ளது. இதனால் இக் குழு சுயமாக இயங்க முடியாமல் உள்ள தாக திருக்கோணமலைக் கடற் படைத் தளத்தின் கடற் படைக் கொமாண்டர் குற்றம் சாட்டியுள்ளார்.

மேற்படி கடற்படைத்தளம் அமைக்கும் முகமாக செய்யப்பட்ட ஒப்பந்தத்தின் மூலம் ஜனாதிபதி திரு. டிங்கிரி பண்டா விஜேதுங்க பல மில்லியன் ரூபாவை லஞ்சமாகப் பெற்றுக் கொண்டார் எனக் கருதப்படுகிறது. இவர் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சராக இருந்த காலப் பகுதியிலேயே விசேட சலுகைகளின் அடிப்படையில் இவ்வொப்பந்தம்செய்து கொள்ளப்பட்டதாகவும் இதற்காக தற்போதைய ஜனாதிபதி இவ்வாறு பல மில்லியன் ரூபாவை லஞ்சமாகப்பெற்றிருக்கலாம் என்று கடந்த வாரம் வெளியாகிய 'யுக்திய' என்ற சிங்கள வார இதழ் தலைப்புச் செய்தி வெளியிட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்

(3ஆம் பக்கம் பார்க்க)

## 27 தமிழ் இளைஞர்கள் பலாலி முகாமில் தடுப்பு

(யாழ்ப்பாணம்)

வடபகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கையின்போது கைது செய்யப்பட்ட சுமார் 27 தமிழர்கள் பலாலி இராணுவத்தளத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

மேற்படி பகுதியில் கைது செய்யப்பட்ட ஏனையோர் தென்பகுதிக்கு இடமாற்றப் பட்டிருக்கலாம் என்று தெரிய வருகிறது

இவர்களின் விடுதலை குறித்து தற்போது எந்த முடிவும் எடுக்கப்படுவதற்கான சூழ்நிலைகள் தென்படவில்லை என்றும் தெரிய வருகிறது.

(க),(நி)

## இளவாலை, மாதகல் பகுதியை அரச அதிபர் பார்வையிட்டார்

வலிவடக்கில் கடந்த ஒரு வருடமாக இராணுவ பிடிக்குள் சிக்கியுள்ள மக்களை கடந்த வியாழனன்று யாழ் அரசாங்க அதிபர் சென்று பார்வையிட்டார்.

மாதகல், இளவாலை பகுதிகளில் இராணுவத்தினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ள நூற்றுக்கணக்கானோரை நேரில் சந்தித்த அரச அதிபர் அவர்களுடைய அடிப்படை பிரச்சினைகள் குறித்து பேசியதாகத் தெரிவித்தார்.

இவர்கள் தாம் உற்பத்தி செய்த விவசாயப் பொருள்களை விற்பனை செய்ய முடியாது தவிப்பதாகவும் நயினாதீவிற்கு கொண்டுசெல்லப் செய்யப்படாது மீண்டும் திருப்பி கொண்டு வரப்பட்டுள்ளதாகவும் முறையிட்டுள்ளனர். அத்துடன் தற்போது பிரிந்திருக்கும் தமது உறவினர்களுடன் வாரத்திற்கு ஒருமுறையாகுதல் தொடர்பு கொள்வதற்கு வசதியாக தபால் வசதிகளைச் செய்து தருமாறும் அவர்கள் அரச அதிபரிடம் கோரிக்கை விடுத்தனர்.

இதேவேளை பலாலி பகுதி இராணுவ அதிகாரி விடுத்த வேண்டு கோளுக்கு இணங்கவே தான் மாதகல், இளவாலை பகுதிகளுக்கு விஜயம் செய்ததாகவும் அங்குள்ள இடங்களை சுற்றி பார்வையிட்டதாகவும் அரச அதிபர்

## வடக்கிலிருந்து கிழக்கை பிரிப்பதே எனது நோக்கம்

வடபகுதி மாணவர் பாதிப்பு

## பல்கலை மாணவர்கள் கொழும்பில் விளக்குவர்

(யாழ்ப்பாணம்)

1992 - 93 கல்வியாண்டில் வெட்டுப்புள்ளியால் பாதிக்கப்பட்ட மாணவர்களின் நிலை குறித்தும், எதிர் காலத்தில் யாழ். பல்கலைக் கழகத்திற்கான அனுமதி குறித்தும் தமது கருத்துக்களைத் தெரிவிப்பதற்காக யாழ். பல்கலைக் கழகத்தின் பீடங்களின் மாணவர் அவைத் தலைவர்கள் உள்ளிட்ட ஆறுபேர் கொண்ட குழுவொன்று நாளை கொழும்பு செல்லவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் ஆறாம் திகதி கொழும்பில் கூடவுள்ள பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவின் நிலையியற் குழுவிற்கு வடபகுதி மாணவர்களின் நிலை குறித்து இவர்கள் விளக்கவுள்ளனர். அத்துடன் எதிர்காலத்தில் அனுமதி குறித்த தமது கருத்துக்களையும் தெரிவிப்பர்.

கடந்த காலங்களில் வடபகுதியில் நடைபெற்ற விசேட பரீட்சைகளால் ஏற்பட்ட பாதிப்புக் குறித்து ஆராய

(3ஆம் பக்கம் பார்க்க)

## கப்பல் கட்டணத்தை நிறுத்த கொள்கையளவில் இணக்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டுக்கு கப்பல் மூலம் எடுத்து வரப்படும் அத்தியாவசியப் பொருள்களுக்கான கப்பல்கட்டணத்தை அறவிடுவதை நிறுத்துவது என்று அத்தியாவசிய சேவைகள் பிரிவு கொள்கையளவில் தீர்மானித்துள்ளது.

இத் தீர்மானம் தொடர்பான உறுதிமொழி ஒன்றை மேற்படி பிரிவு யாழ். அரச அதிபருக்கு வழங்கியுள்ளது.

யாழ் குடாநாட்டிற்கான அத்தியாவசிய பொருள்கள் விநியோகத்தின்போது இதுவரைகாலமும்கப்பல்கட்டணமானது அப்பொருள்களின் விலையுடன்கூட்டப்பட்டே விற்பனை செய்யப்பட்டு வந்தது. இதனால்நுகர்வோர் அப்பொருள்களை கூடுதல் விலை கொடுத்து கொள்வனவு செய்ய

(3ஆம் பக்கம் பார்க்க)

## கொலரா நோய்க்கு சிறுமி பலியானார்

(தென்மராட்சி)

தென்மராட்சிப் பகுதியில் கொலரா நோய்க்கு சிறுமி ஒருவர் பலியாகியுள்ளார். கொடிகாமத்தைச் சேர்ந்த ஆறு வயதுச் சிறுமியான நாகேந்திரம் நிவிதா என்ற சிறுமியே இவ்வாறு பலியாகியவராவார்.

இச் சிறுமிக்கு ஏற்கனவே வயிற்றோட்டம் ஆரம்பித்ததை அடுத்து கடந்த வெள்ளியன்று சாவகச்சேரி மருத்துவ மனையில் அனுமதிக்கபபட்டார். பின்னர் அம்புலன்ஸ் மூலம் யாழ் போதனா வைத்தியசாலைக்கு கொண்டுவரும் வழியில் மரணமாகியுள்ளார்.

இந் நோய்க்கு மேலும் பலர் இலக்காகி சாவகச்சேரி மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

## யுத்தக்கைதிகள் விடுதலை

மேற்படி பகுதியில் கைது (ச).(நி)

வும் இதனால் இச் சந்தேகம் எழுந்துள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

தீர்மானித்துள்ளது.

இத் தீர்மானம் தொடர்பான உறுதிமொழி ஒன்றை மேற்படி பிரிவு யாழ். அரச

இதனால் நுகர்வோர் அப்பொருள்களை கூடுதல் விலை கொடுத்து கொள்வனவு செய்ய

(3ஆம் பக்கம் பார்க்க)

# இளவாலை, மாதகல் பகுதியை அரச அதிபர் பார்வையிட்டார்

வலிவடக்கில் கடந்த ஒரு வருடமாக இராணுவ பிடிக்குள் சிக்கியுள்ள மக்களை கடந்த வியாழனன்று யாழ் அரசாங்க அதிபர் சென்று பார்வையிட்டார்.

மாதகல், இளவாலை பகுதிகளில் இராணுவத்தினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ள நூற்றுக்கணக்கானோரை நேரில் சந்தித்த அரச அதிபர் அவர்களுடைய அடிப்படை பிரச்சினைகள் குறித்து பேசியதாகத் தெரிவித்தார்.

இவர்கள் தாம் உற்பத்தி செய்த விவசாயப் பொருள்களை விற்பனை செய்ய முடியாது தவிப்பதாகவும் நயினாதீவிற்கு கொண்டுசெல்லப்பட்ட வெற்றிலை விற்பனை செய்யப்படாது மீண்டும் திருப்பி கொண்டு வரப்பட்டுள்ளதாகவும் முறையிட்டுள்ளனர்.

அத்துடன் தற்போது பிரிந்திருக்கும் தமது உறவினர்களுடன் வாரத்திற்கு ஒருமுறையாகுதல் தொடர்பு கொள்வதற்கு வசதியாக தபால் வசதிகளைச் செய்து தருமாறும் அவர்கள் அரச அதிபரிடம் கோரிக்கை விடுத்தனர்.

இதேவேளை பலாலி பகுதி இராணுவ அதிகாரி விடுத்த வேண்டுகோளுக்கு இணங்கவே தான் மாதகல், இளவாலை பகுதிகளுக்கு விஜயம் செய்ததாகவும் அங்குள்ள இடங்களை சுற்றி பார்வையிட்டதாகவும் அரச அதிபர் தெரிவித்தார். (ச, நி)

# பேத்தாளை அகதிமுகாமில் நிவாரணம் இல்லை

(மட்டக்களப்பு)

பேத்தாளை அகதிமுகாமில் உள்ள தமிழ் அகதி மக்கள் இரு மாதங்களாக நிவாரணம் எதுவுமின்றி பட்டினியால் வாடுகின்றனர்.

22 குடும்பங்களைச் சேர்ந்த 80 பேர் இந்த அகதிமுகாமில் பெரும் கஷ்டத்தை அனுபவித்து வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது;

வடமுனை, பிறைந்துறை சேனை இடங்களைச் சேர்ந்த இவர்கள் நிவாரணத்திற்காக ஏங்கிக் கொண்டிருக்கின்றனர்.

இது குறிதது மேலும் தெரிவிக்கப்படுவதாவது;

திருக்கோணமலைத் துறைமுகத்தில் புதிதாக அமைக்கப்பட்டுவரும் கடற்படைத் தளம் தொடர்பாக எழுந்துள்ள ஊழல் குற்றச் சாட்டுக்கள் குறித்து விசாரணை செய்வதற்காக அமைக்கப்பட்ட குழுவில் ஜனாதிபதியின் தலையீடு அதிகமாக உள்ளது. இதனால் இக் குழு சுயமாக இயங்க முடியாமல் உள்ள தாக திருக்கோணமலைக் கடற்படைத் தளத்தின் கடற்படைக் கொமாண்டர் குற்றம் சாட்டியுள்ளார்.

மேற்படி கடற்படைத்தளம் அமைக்கும் முகமாக செய்யப்பட்ட ஒப்பந்தத்தின் மூலம் ஜனாதிபதி திரு. டிங்கிரி பண்டா விஜேதுங்க பல மில்லியன் ரூபாவை லஞ்சமாகப் பெற்றுக் கொண்டார் எனக் கருதப்படுகிறது. இவர் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சராக இருந்த காலப் பகுதியிலேயே விசேட சலுகைகளின் அடிப்படையில் இவ்வொப்பந்தம்செய்து கொள்ளப்பட்டதாகவும் இதற்காக தற்போதைய ஜனாதிபதி இவ்வாறு பல மில்லியன் ரூபாவை லஞ்சமாகப்பெற்றிருக்கலாம் என்று கடந்த வாரம் வெளியாகிய 'யுக்திய' என்ற சிங்கள வார இதழ் தலைப்புச் செய்தி வெளியிட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்

(3ஆம் பக்கம் பார்க்க)

# வடக்கிலிருந்து கிழக்கை பிரிப்பதே எனது நோக்கம்

## சிறிலங்கா ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

''வடக்கிலிருந்து கிழக்கை விரைவில் தனிமைப் படுத்துவதே எனது நோக்கம். வடக்கிலிருந்து கிழக்கைப் பிரித்து விட்டால் வடக்கு சிறிய பிரதேசமாகிவிடும். அப்போது அதற்குத் தேவையான சிகிச்சை அளிக்கலாம்'' என சிறிலங்கா ஜனாதிபதி டிங்கிரி பண்டா விஜேதுங்க கூறியுள்ளார்.

இரத்தினபுரி மாவட்ட அரசாங்க அதிகாரிகள் மத்தியில் அவர் உரையாற்றுகையில்; ''வடக்கு கிழக்கு தமது பாரம்பரியபூமி என்பதனால்அதனை தனியாகப் பிரிக்கவேண்டும் என்று விடுதலைப் புலிகள் கூறுகின்றனர். என்னால் பிரித்துக் கொடுக்கமுடியும். ஆனால் அவ்வாறான அநீதியான செயலை செய்ய நான் விரும்பவில்லை

''கிழக்கில் ஜனவரியில் உள்ளூராட்சித் தேர்தல் நடைபெற்றதன் பின்னர் பிரபாகரனுடன் பேசலாம், முடியா விட்டால் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

'வடக்கு கிழக்கு மாகாணங்களில் எமது அரசாங்கத்திற்கு எவ்வித வருமானமும் இல்லை. ஆனால் இந்த மாகாணங்களுக்கு தேவையான உணவை நாமே அனுப்பவேண்டியுள்ளது. ஆனால் அவர்கள் அரசாங்கச் சொத்துக்களை நாசப்படுத்தி தனிநாடு வேண்டுமென்று கோருகின்றனர்.

''வடக்கிலிருந்து கிழக்கைப் பிரித்துவிட்டால் வடக்கு சிறிய பிரதேசமாகிவிடும். அப்போது அதற்குத் தகுந்த சிகிச்சை அளிக்கலாம். வைத்தியர்களால் முடியாவிட்டால் நான்

( 3 ஆம் பக்கம் பார்க்க )

# கொலரா நோய்க்கு சிறுமி பலியானார்

(தென்மராட்சி)

தென்மராட்சிப் பகுதியில் கொலரா நோய்க்கு சிறுமி ஒருவர் பலியாகியுள்ளார். கொடிகாமத்தைச் சேர்ந்த ஆறு வயதுச் சிறுமியான நாகேந்திரம் நிவிதா என்ற சிறுமியே இவ்வாறு பலியாகியவராவார்.

இச் சிறுமிக்கு ஏற்கனவே வயிற்றோட்டம் ஆரம்பித்ததை அடுத்து கடந்த வெள்ளியன்று சாவகச்சேரி மருத்துவ மனையில் அனுமதிக்கபபட்டார். பின்னர் அம்புலன்ஸ் மூலம் யாழ் போதனாவைத்திய சாலைக்கு கொண்டுவரும் வழியில் மரணமாகியுள்ளார்.

இந் நோய்க்கு மேலும் பலர் இலக்காகி சாவகச்சேரி மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

# யுத்தக்கைதிகள் விடுதலை சிறிலங்கா அரசு அசிரத்தை

## 'ராவய' விற்கு கைதிகள் தெரிவிப்பு

(கொழும்பு)

தமது விடுதலை குறித்து அரசாங்கமோ அல்லது வேறு அமைப்புகளோ கரிசனை கொள்ளாததையிட்டும் தெற்கிலுள்ள அமைப்புக்கள், பத்திரிகைகளின் இனவாத போக்குகள் குறித்தும் விடுதலைப் புலிகளின் பாதுகாப்பிலுள்ள யுத்தக்கைதிகள்வெறுப்படைந்துள்ளனர் என யாழ்ப்பாணம் வந்து திரும்பிய 'ராவய' பத்திரிகையாளர் 'சந்தேசிய'

(3ஆம் பக்கம் பார்க்க)

# மீனவர் மீது தாக்குதல் ஒருவரைக்காணவில்லை

(குருநகர்)

பூநகரி - பெரியவேலிப் பகுதியில் நிலைகொண்டுள்ள சிறீலங்கா ராணுவம் அப் பகுதிக் கடலில் மீன் பிடிக்கச் சென்ற தொழிலாளர்களை நோக்கி எறிகணை மற்றும் கலிபர் தாக்குதலை நடத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று முன்தினம் இரவு நடத்திய மேற்படி தாக்குதலுக்கு இலக்கான குருநகரைச் சேர்ந்த கடற்றொழிலாளர்கள் வள்ளங்களையும், வலைகளையும் கைவிட்டு நீந்திக் கரைவந்து சேர்ந்தனர்.

இவர்களுடன் சென்ற மூதூரைச் சேர்ந்த லோறன்ஸ் என்பவர் நேற்று மாலைவரை திரும்பவில்லை. இவர் ராணுவத்திடம் அகப்பட்டிருக்கலாம் என்று நீந்திக் கரைவந்த தொழிலாளர்கள் தெரிவித்தனர். (21)

# காஷ்மீர் - இந்தியா இணைப்பு சட்டபூர்வ தன்மை குறித்து அமெரிக்காவிற்கு சந்தேகமாம்

(டில்லி)

இந்தியாவுடன் காஷ்மீர் இணைக்கப்பட்ட செயலின் சட்டபூர்வ தன்மை குறித்து அமெரிக்க அதிகாரி ஒருவர் வினா எழுப்பியுள்ளார். இவரின் இக்கருத்துக்கு இந்திய அரசு கடும் ஆட்சேபம் வெளியிட்டுள்ளது.

இந்தியாவுடன் காஷ்மீர் இணைக்கப்பட்ட செயலின் சட்டபூர்வ தன்மை குறித்து அமெரிக்க உயர் அதிகாரி ஒருவர் வெளியிட்ட ஒரு கருத்து தொடர்பாக புதுடில்லி கடுமையான கண்டனத்தை தெரிவித்துள்ளது.

புதுடில்லியிலுள்ள அமெரிக்கத் தூதுவரகத்தின் பொறுப்பதிகாரி வெளியுறவு அமைச்சுக்கு வரவழைக்கப்பட்டு இந்திய அரசின் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்ற வியாழனன்று அமெரிக்க துணை வெளியுறவு அமைச்சர் செல்வி றாபின் றாபெல்வாஷிங்டனில் செய்தியாளர்களிடம் பேசுகையில் வெளியிட்ட கருத்துக்கள் இந்திய அரசுக்கு மிக மிக மனக் கலக்கத்தை ஏற்படுத்தக் கூடியவை என்றும், ஏனென்றால் இந்தியாவின் அடிப்படை நலன்கள் மீது அது நேரடியான தாக்கத்தை ஏற்படுத்துகின்றது என்றும் சுட்டிக் காட்டப்பட்டது

அத்துடன் இந்தியாவின் சுதந்திரம், பிரதேச ஒருமைப்

(03ஆம் பக்கம் பார்க்க)

# இந்திய அரசியற் கட்சிகள் பலத்த கண்டனம்

(டில்லி)

காஷ்மீர் இந்தியாவுடன் இணைக்கப்பட்டமை தொடர்பாக அமெரிக்க உயர் அதிகாரி ஒருவர் கூறியகருத்தை பல இந்திய அரசியற் கட்சிகள் கண்டித்துள்ளன. ''இது கவலை தரும்விடயம் காஷ்மீர் இந்தியாவுடன் இணைப்பது குறித்து கேள்வி எழுப்புவது ஹாசியானாவும், அலஸ்காவும் ஹாவாய் தீவும் அமெரிக்க எல்லைக்குள் கொண்டுவரப்பட்ட சரித்திரபூர்வம் பற்றி வினா எழுப்புவது போல்நகைப்பிற்கு இடமானது'' என முன்னாள் இந்திய வெளியுறவு அமைச்சர் நட்வர்சிங் தெரிவித்தார்.

றாபின்றாபெல் என்ற அந்த அமெரிக்க அதிகாரி வெளியிட்ட கருத்துக்கள் அவருடைய சொந்த கருத்தாக இருக்க வேண்டுமேயன்றி கிளின்டன் நிர்வாக கருத்தாக

(03ஆம் பக்கம் பார்க்க)

# கிளாலி - பூநகரி படகுச்சேவை

கிளாலி–பூநகரி படகுச் சேவை நாளையும் எதிர்வரும் 4–ம், 6–ம் திகதிகளிலும் நடைபெறும் என அரசியற் துறையினர் அறிவித்துள்ளனர்.

# அன்றாட வாழ்விற்கே சிரமமுறும் யாழ் மக்கள்

யாழ்ப்பாணத்தில் மக்கள் மிகுந்த சிரமங்களின் மத்தியில் வாழ்கின்றனர். அவர்கள் தமது அன்றாட தேவைகளை பூர்த்திசெய்து கொள்வதுகூட சிரமம். மின்சாரம் இல்லை, போக்குவரத்து வசதிஇல்லை, நோயாளரை கொண்டு செல்ல முடியாதநிலை, மிதிவண்டியிலேயே மக்கள் பயணம் செய்கின்றனர். அவற்றுக்கு உதிரிப் பாகங்கள் இல்லை. மருந்துப் பொருள்கள் இல்லை. இவ்வளவு சிரமங்களுக்கும் மத்தியில் வாழும் அவர்களுக்கு எம்மால் இயன்றதை நாம் செய்யவேண்டும் என இலங்கை செஞ்சிலுவைச்சங்க தலைவர் தீன பந்து தயா அபேசிங்கா 'சந்தேசிய' வானொலிக்கு தெரிவித்தார்.

தற்போது லண்டனில் தங்கியிருக்கும் இவர்செஞ்சிலுவைச் சங்க வருடாந்த மாநாட்டில் கலந்துகொள்ள அங்கு சென்றிருந்தார்.

அவர் மேலும் கூறுகையில்; இலங்கை செஞ்சிலுவைச் சங்க

( 3 ஆம் பக்கம் பார்க்க )

**தமிழா !**

காலம் எமது கைபிடித்து நடக்கிறது
ஞாலம் வியக்கும் தலைவன் வழிகாட்டி
வெற்றி வெகுதூரம் இல்லை
காலடியில் தான் கிடக்கிறது
போராடுவோம் வா.

# இந்தியா - பாகிஸ்தான் பேச்சுவார்த்தைமூலமேதீர்வு

## அமெரிக்க வெளியுறவு அதிகாரி

(வாஷிங்டன்)

சிம்லா ஒப்பந்தப்படி இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கும் இடையே நேரடி பேச்சுகள் நடத்துவதே காஷ்மீர் பிரச்சினைக்கு தீர்வு காண சிறந்த வழி என அமெரிக்க வெளியுறவு துறை கூறியது.

இதன் உயரதிகாரி ஒருவர் இது தொடர்பாக அறிக்கை ஒன்றை நேற்று வெளியிட்டார். இந்தியாவும் - அமெரிக்காவும் விரிவான உறவை கொண்டிருப்பதாகவும் அவர் கூறினார். காஷ்மீர் பிரச்சினை

( 3ஆம் பக்கம் பார்க்க )

## வரி விளம்பரம்

### இன்று செவ்வாய் (விருட்சிகத்துக்கு) மாற்றம்

(10-11-93) மீண்டும் கும்ப ராசிக்குச் சனி மாற்றம், 12-10-93 முதல் வியாழ மாற்ற பலன்களும் சத்யாவின் எண்ஜோதிடமும் அடங்கியவை. ரூ. 10/. எங்கும் விற்பனையாகின்றது. கனகா ரேடர்ஸ், திருநெல்வேலி.
(6441)

### தேவை

றேடியோ, T. V. டெக் றிப்பெயரிங், பாடல் பதிவு, வீடியோ படப்பிடிப்புபோன்ற தொழில்கள் பழக விரும்புவோரும், தொழில் தெரிந்தவர்களும் தேவை. தொடர்பு நியூ விக்ரேஸ், B. M. C. ஒழுங்கை யாழ்ப்பாணம்.
(6438)

### மிருதங்கம்

இரண்டு நாட்களுக்குள் தோல் வாத்தியங்கள் யாவும் சுத்தமாக சாதம் போட்டுத் தரப்படும். கோவிந்தபிள்ளை விஜயகுமார், 192/1, நாவலர் வீதி, பெருமாள் கோவிலடி, யாழ்ப்பாணம். (6407)

### கண்காட்சி

வடமராட்சிக் கல்விக் கோட்ட மனைப்பொருளியல் வள நிலையத் திறப்பு விழாவும் கண்காட்சியும் நாளையும், நாளை மறுதினமும் யா. வதிரி திரு இருதயக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்ச்சியில் பிரதம விருந்தினராக யாழ். பிரதேச கல்விப் பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் கலந்துகொள்ள இருக்கிறார்.

### குமணவில் ஒய்வூதிய வவுச்சர்

(நமதுநிருபர்)

அடுத்தவார பிற்பகுதியில் குமணகப்பல்பருத்தித்துறையை வந்தடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

எதிர்வரும் புதன்கிழமை கொழும்பிலிருந்து புறப்படவிருக்கும் இக்கப்பலில்நவம்பர் மாதத்திற்கான ஓய்வூதிய வவுச்சர்களும் எடுத்துவரப்படவுள்ளதாக யாழ் அரச அதிபர் தெரிவித்தார். (ச, நி)

### ஆசிரியப் பணியில் வெள்ளி விழா

சங்கரத்தை சின்னம்மா வித்தியாலய அதிபர் திருமதி சாரதாமணி மாணிக்கவாசகர் அவர்களின் ஆசிரியப்பணியின் வெள்ளி விழா 1.11.93 திங்கட் கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் மேற்படி பாடசாலையில் நடைபெறவுள்ளது.


## கஜன் விறகுகாலை

இங்கு 5 மாதங்களுக்கு முன்பு கொத்திக் காய்ந்த தரமான பலரக விறகுகள் விற்பனையாகின்றன. விரும்புவோர் தேவைக்கு முந்துங்கள்.

கஜன் விறகுகாலை
கேணியடி வயிரவர்கோவில்,
ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி.

(6437)

## வெள்ளிவிழா அழைப்பிதழ்

அன்புடையீர்,

யா/ சங்கரத்தை சின்னம்மா வித்தியாசாலை அதிபர்

**திருமதி மா. சாரதாமணி அவர்களின்**

ஆசிரியப்பணியின் வெள்ளிவிழா 1-11-93 திங்கட்கிழமை பிற்பகல் 2-00 மணியளவில் மேற்படி பாடசாலையில் நடைபெறும். அனைவரையும் அன்புக்கரம் நீட்டி அழைக்கிறோம்.

"மாதா பிதா குரு தெய்வம்"

சங்கரத்தை, (6424) பெற்றோர், ஆசிரியர், மாணவர்கள்.

# இலவச பற்சிகிச்சை Free Dental Service



தமிழீழ மக்களின் நலன் கருதி பின்வரும் தினங்களில் எமது வைத்தியசாலையில்

**இலவச பற்சிகிச்சை அளிக்கப்படும்**

31-10-93 ) ஞாயிறு காலை
07-11-93 ) 8.30 மணி முதல்
14-11-93 ) நண்பகல் 12.00 மணிவரை

## எமது ஏனைய சேவைகள்:-

(சலுகைக் கட்டண அடிப்படையில் *Concession Rate*)

- அனுபவம் நிறைந்த வைத்தியர்களின் 24 மணிநேர வெளி, உள் நோயாளர் சேவை (24HOURS SERVICE)
- சகல துறைகளிலும் வைத்திய நிபுணர்களின் ஆலோசனை [SPECIALIST CONSULTATION]
- சத்திர சிகிச்சை வசதி [OPERATION THEATRE FACILITY]
- மகப்பேறு கூட வசதி [MATERNITY SECTION]
- பற்சிகிச்சை வசதி [DENTAL SURGERY]
- ஆய்வுகூட பரிசோதனை வசதி [LABORATORY FACILITY]
- ஈ. சீ. ஜீ. வசதி [E. C. G.]
- விசேட மருத்துவ விடுதிகள் [SPECIAL WARD]
- இரவு/பகல் மருந்தக சேவை [DAY & NIGHT PHARMACY]

"எம் கடன் பணி செய்வதே"

# வில்லியம் ஹாவே தனியார் மருத்துவமனை

# William Harvey Private Hospital

இல. 17, கண்டி வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
(6428)
No. 17, Kandy Road, Chundukkuli, JAFFNA.


நினைவு கூருகின்றோம்...

கேணியடி வயிரவர்கோவில்,
ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி.

(6437)

## வெள்ளிவிழா அழைப்பிதழ்

அன்புடையீர்,

யா/ சங்கரத்தை சின்னம்மா வித்தியாசாலை அதிபர்

**திருமதி மா. சாரதாமணி அவர்களின்**

ஆசிரியப்பணியின் வெள்ளிவிழா 1-11-93 திங்கட்கிழமை பிற்பகல் 2-00 மணியளவில் மேற்படி பாடசாலையில் நடைபெறும். அனைவரையும் அன்புக்கரம் நீட்டி அழைக்கிறோம்.

" மாதா பிதா குரு தெய்வம் "

சங்கரத்தை,
(6424)

பெற்றோர், ஆசிரியர்,
மாணவர்கள்.


- ஆய்வுகூட பரிசோதனை வசதி [LABORATORY FACILITY]
- ஈ. சீ. ஜீ. வசதி [E. C. G.]
- விசேட மருத்துவ விருதிகள் [SPECIAL WARD]
- இரவு/பகல் மருந்தக சேவை [DAY & NIGHT PHARMACY]

"எம் கடன் பணி செய்வதே"

# வில்லியம் ஹாவே தனியார் மருத்துவமனை

# William Harvey Private Hospital

இல. 17, கண்டி வீதி, சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.

(6428)

No. 17, Kandy Road, Chundukkuli,
JAFFNA.


## தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் நடாத்தும்

# "3 ஆவது" வதிவிட வேளாண்மைப் போட்டி

## 1993-1994 யாழ் மாவட்டம்

தமிழீழ விடுதலைப் போராட்டமானது பேரினவாத ஒடுக்குமுறைகளில் இருந்து எம் மக்களை விடுவிப்பதோடு மட்டும் நிற்கவில்லை. சார்ந்து நிற்கும் பொருளாதார நிலையில் இருந்து தமிழ் மக்களை விடுபடச் செய்து எமது சொந்த மண்ணில் சொந்தக் கால்களில் தங்கி நிற்கும் தன்னிறைவான பொருளாதார வாழ்வைக் கட்டி எழுப்புவதற்கு வழிவகுத்துள்ளது.

இப்பணியில் செயற்பட்டு வரும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் தமிழீழ மக்கள் அனைவருமே இன்று எதிர்கொண்டுள்ள பாரிய பொருளாதார சுமையினின்றும் விடுபட பல்வேறு செயற்திட்டங்களை அறிமுகப்படுத்தி செயற்படுத்தி வருகிறது.

இவ்வாறாக வதிவிட வேளாண்மையில் ஈடுபட்டுள்ள மக்களை ஊக்கப்படுத்தும் விதமாகவும் இரண்டாவது முறையாக 1993/94 காலப் பகுதியில் யாழ் குடாநாட்டிற்குட்பட்ட குடியிருப்பாளர்களை உற்பத்தி முயற்சியில் ஈடுபட வைக்கவும் வதிவிட வேளாண்மைப் போட்டி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

எனவே அனைத்து குடியிருப்பாளர்களும் தமது வீடு அமைந்துள்ள காணியில் அல்லது வதிவிடத்திற்கு அண்மையாக உள்ள 4 பரப்புக்கு உட்பட்ட காணியில் வேளாண்மைச் செய்கையில் ஈடுபட்டு தமது தேவைகளை பூர்த்தி செய்வதோடு பரிசில்களையும் பெற்றுக் கொள்ளுமாறு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் வேண்டிக் கொள்கிறது.

### போட்டிகளுக்கான நிபந்தனைகள் :-

01. வீடு அமைந்திருக்கும் வசதிக்கேற்ப வதிவிட பயிர்ச் செய்கையைக் கவர்ச்சிகரமாக அமைத்தல்.

02. 10 அடி நீளம், 3 அடி அகலமும் ஆன பாத்திகளில் உள்நாட்டு மரக்கறி பயிர்களான வெண்டி, மிளகாய், புசிற்றாவோ, பயிற்றை, கத்தரி, புடோல், பாகல், தக்காளி, பீர்க்கு, அவரைபோன்றவையும், மேல்நாட்டு மரக்கறிப் பயிர்களாக போஞ்சி, முள்ளங்கி, பூக்கோவா, பீற்றூட், கரட் போன்றவையும் இவற்றுள் குறைந்தது (5) ஐந்து வகை பயிர் இனங்களில் மூன்று உள்நாட்டு மரக்கறி வகைகளும், மேல் நாட்டு மரக்கறி வகைகளில் இரண்டும் (2) செய்கை பண்ணப்பட்டு இருத்தல் வேண்டும்.
அத்துடன் மரவள்ளி, வற்றாளை போன்ற கிழங்கு வகைப் பயிர்களில் ஒன்று முக்கியமாக நாட்டப்பட்டிருத்தல் வேண்டும்.
சோளம், கம்பு, இறுங்கு போன்ற தானியப் பயிர்களில் ஏதாவது ஒன்று முக்கியமாக பயிரிடப்பட்டிருத்தல் வேண்டும்.

03. 10 அடி நீளமும், 3 அடி அகலமுமான பாத்திகளில் இலை வகைகள் மரக்கறிப் பயிர்களான பொன்னாங்காணி, முளைக்கீரை, பசளி, கங்குள் கீரை, வல்லாரை ஆகியவற்றில் குறைந்தது இரண்டு வகை இருத்தல் வேண்டும். அத்தோடு அகத்தி, முருங்கை, தூதுவளை, சண்டி, முல்லை, முசுட்டை ஆகியவற்றில் குறைந்தது இரண்டு இனமாதல் இருத்தல்வேண்டும்.

04. மஞ்சள், இஞ்சி, பெருஞ்சீரகம், வெந்தயம், மல்லி, கருவேற்பிலை, றம்பை போன்ற இனங்களில் மூன்று(3) நாட்டப்பட்டிருத்தல் வேண்டும்.

05. பழ மரங்களான பப்பாசி, வாழை, மரக்கொய்யா, தோடை, மாதுளை கொடித்தோடை, பலா, எலுமிச்சை ஆகியவற்றுள் 4 மரங்கள் புதிதாக நாட்டப்பட்டிருத்தல் வேண்டும்.

06. பயனுள்ள மரங்களான தென்னை ஒன்று அல்லது கமுகு இரண்டு ஆகியவை புதிதாக நாட்டப்பட்டிருத்தல் வேண்டும்.

07. கூட்டெரு குழி முறையிலோ, குவியல் முறையிலோ மேற்கொள்ளப் பட்டிருக்க வேண்டும்.

08. தேனீ வளர்த்தல் :-
குறைந்தது ஓர் பெட்டியிலாவது அல்லது மரக்கொட்டுக்களிலாவது வளர்ப்பில் ஈடுபட்டிருத்தல் வேண்டும்.

09. கோழி வளர்த்தல் :-
குறைந்தது (10) பத்து கோழிகள் (கூடு அமைப்பு) கனகூழ முறையில் வளர்த்தல் வேண்டும்.

10. தாரா ஒரு சோடி வளர்த்தல் வேண்டும். அல்லது அதற்கு பதிலாக 5 கோழிகள் கூடுதலாக வளர்க்க வேண்டும்.

11. பசுமாடு ஒன்று அல்லது மறி ஆடு ஒன்று வளர்க்கப்படல் வேண்டும்.
இவை இரண்டையும் வளர்ப்பவர்களுக்குக் கூடிய புள்ளிகள் வழங்கப் படும்.

12. முயல் குறைந்தது ஒரு சோடி வளர்க்கப்படல் வேண்டும்.

13. விலங்குத் தீவனமாக புல்லினம், இப்பில் இப்பில், முள்முருங்கை, சீமைக் கிளுவை என்பன இருத்தல் வேண்டும்.

14. பதிவேடு பேணல் :-
மரக்கறிப் பயிர், கால்நடை வளர்ப்பிற்கானவை தனித்தனி பேணப் படல் வேண்டும்.

### குறிப்பு :-

விண்ணப்பப் படிவங்களை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் யாழ் மாவட்ட செயலகம், கோட்டச் செயலகங்கள், கிராமிய உற்பத்திக்குழு வட்ட தொடர்பாளர்கள் அலுவலகங்களில் பெற்று பூரணப் படுத்தி 15-11-93 ஆம் திகதி திங்கட்கிழமை நேரடியாகவோ அல்லது கடித மூலமாகவோ மேற்குறித்த அலுவலகங்களில் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

மேலதிகமாகத் தேவைப்படும் விபரங்களைத் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன மாவட்ட, கோட்ட, வட்ட அலுவலகங்களிலும், கமநல சேவைத் திணைக்களங்களிலும், விவசாயப் போதனாசிரியர்களிடமும் அரச சார்பற்ற நிறுவனங்களிலும் பெற்றுக் கொள்ளலாம்.

மரக்கறி விதைகள் விண்ணப்பதாரிகளுக்கான பயிற்சிக் கூட்டத்தில் வைத்து இலவசமாக வழங்கப்படவுள்ளன.

இப்போட்டியில் கலந்து கொள்வோர் 15-11-93 தொடக்கம் 15-12-93 வரையுள்ள காலப்பகுதிக்குட்பட்ட நாட்களில் அனைத்துப் பயிர்களும் நாட்டப்பட்டிருத்தல் வேண்டும்.

### போட்டிகள் பார்வையிடும் காலம் :-

முதலாம் கட்டப் பார்வையிடுதல்
01-01-94 தொடக்கம் 20-01-94 வரையுள்ள காலப்பகுதி
இரண்டாம் கட்டப் பார்வையிடுதல்
01-02-94 தொடக்கம் 15-02-94 வரை
இறுதிக்கட்டப் பார்வையிடல்
20 02-94 தொடக்கம் 29-02-94 வரை

(சி-7806)

## நினைவு கூருகின்றோம்...

## 1993-10-31

1987ஆம் ஆண்டு இதேதினத்தில் நெடுங்கேணியில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் எமைப் பிரிந்த-

**2-ம் லெப் காண்டீபன்** (சிதம்பரப்பிள்ளை செல்வநாயகம் - புளியம்பொக்கணை- கிளிநொச்சி)

1988ஆம் ஆண்டு மட்டு - கோட்டைக் கல்லாறுப் பகுதியில் இந்தியப்படையினரின் சுற்றிவளைப்பின் போது வீரச்சாவெய்திய-

மட்டு - அம்பாறை அரசியல் பொறுப்பாளர்-

**கப்டன் பிரான்சிஸ்** (இராசையா சடாட்சரபவான்- கோட்டைக்கல்லாறு - மட்டு)

சாவகச்சேரி, மட்டுவில் பகுதியில் இந்தியப்படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய-

**டக்ளஸ்** (பாலசிங்கம் பரமேஸ்வரன் - மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி - யாழ்)

**சீலன் ( . . . )**

நெடுங்கேணிப் பகுதியில் இந்தியப்படையினரால் கைது செய்யப்பட்ட பின்னர் காணாமல் போன நெடுங்கேணி - மாமடுவைச் சேர்ந்த நெடுங்கேணி மகாவித்தியாலய உயர்வகுப்பு மாணவன்.

நுணாவில் கிழக்குப் பகுதியில் இந்தியப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 02 தமிழிளைஞர்கள்.

தேசவிரோதிகளால் சுட்டுக்கொல்லப்பட்ட சுண்டுக்குளியைச் சேர்ந்த யாழ் - பரியோவான் கல்லூரி மாணவன்.

1990ஆம் ஆண்டு வவுனியாவில் தவறுதலாக குண்டு வெடித்ததில் எமைப்பிரிந்த-

**கப்டன் அர்ச்சனா** (அருணாசலன் ரவீந்திரன் - புதிய கொலனி - வவுனியா)

கள்ளிக்குளம் பகுதியில் எதிர்பாராதவிதமாக கைக்குண்டு வெடித்ததில் எமைப்பிரிந்த-

**சுரேஸ்** [இராசரட்ணம் விக்னேஸ்வரன் - 4-ம் படிவம், பாவற்குளம் - வவுனியா]

1991ஆம் ஆண்டு தமிழீழக்கடற்பரப்பில் (பருத்தித்துறை) சிறிலங்கா கடற்படையினரின் தாக்குதலில் கொல்லப்பட்ட கடற்றொழிலாளி.

1992ஆம் ஆண்டு மட்டு - ஆண்டான்குளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து தாக்கியதில் வீரச்சாவெய்திய-

**இன்பசீலன்/ஜமுனன்** [அழகுதுரை விஜயகாந்தன் - நாவற்குடா - மட்டு]

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்.**

சி-7808]

நல்லூர் [illegible] நூலகம்
மாநகர [illegible] மன்றம்
யாழ்ப்பாணம்

### சிந்தனைக்கு

சலவைக்குப் போட்டால் காகிதக் கைக்குட்டை திரும்பி வராது. நீதிமன்றம் சென்றால் காதலும் திரும்பி வரப் போவதில்லை.

-- ஜான் பேர்ரிமோர்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 31-10-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாக பீடம் 2023
த. பெ. எண் - 05

## டி. பி யின் தீவிரம்

ஸ்ரீலங்கா ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க அடுத்த பாராளுமன்றத் தேர்தலுக்கும், ஜனாதிபதித் தேர்தலுக்கும் இடையில் பேரினவாதத்திற்கு தலைமை தாங்குவதற்கான தனது தகைமையை செயல்திறன் அடிப்படையில் நிரூபித்துக் காட்ட விழைகின்றார். இந்த வகையில் இனப்பிரச்சினைக்கான அரசியற் தீர்வுக்குரிய கதவுகளை இறுகச் சாத்தியுள்ள அவர், இராணுவத் தீர்வையே முழுமையாக நாடியுள்ளார். இதற்கு அடுத்ததாக தமிழர் தாயகத்தைத் துண்டாடி கிழக்கு மாகாணத்தை முழுமையாக ஆக்கிரமித்துக் கொள்ள முற்படுகின்றார்.

இதை ஒட்டியே அடுத்த வருடம் ஜனவரியில் கிழக்கில் உள்ளூராட்சித் தேர்தல்களை நடத்தவும், அதைத் தொடர்ந்து சர்வசன வாக்கெடுப்பை நடத்தவும் தீவிரமாக முயற்சித்தும் வருகின்றார். இதன் மூலம் கிழக்கைத் துண்டாடிபேரினவாதத்தின் ஆக்கிரமிப்பு வெறிக்கு தீனி போட முற்படுகின்றார்.

ஆனால், டி. பி. விஜேதுங்கவின் இத்திட்டம் தற்பொழுது உதயமானதொன்றல்ல. மே மாதத்தில் பதவி ஏற்ற உடனேயே இது தொடர்பான நடவடிக்கையில் அவர் இறங்கியிருந்தார். பதவி ஏற்று குறுகிய காலத்திற்குள்ளேயே கிழக்கில் தேர்தல் நடத்துவது பற்றி படை அதிகாரிகளுடனும், தேர்தல் உதவி ஆணையாளர்களிடமும் அரசாங்கம் பேச்சு நடத்தி இருந்தது. ஆனால், சூழ்நிலை சரியாக இல்லை எனக் கைவிடப்பட்டது.

ஆனால், தற்பொழுது மீண்டும் ஜனவரியில் தேர்தல் நடத்துவது பற்றி டி. பி. விஜேதுங்க வற்புறுத்தத் தொடங்கியுள்ளார். அவர் கூறுவது போன்று 'தேர்தல்' என்ற பெயரில் ஒன்றுநடத்துவது முடியாத காரியமுமல்ல. இராணுவத்தின் உதவியுடன் தேர்தலை எவ்வாறு நடத்துதல், தேர்தலை எவ்வாறு குழப்பி அடித்தல் போன்றவற்றில் அனுபவம் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்திற்குப் போதிய அளவில் உள்ளது.

இந்நிலையில், கிழக்கில் 'தேர்தலை' நடத்துவதும், அதில் வெற்றி பெறுவதும் பெரியதொரு விடயமல்ல. அதாவது, புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளைத்

## தப்பியோடிய சிப்பாய் கஞ்சா கடத்தலில் ஈடுபாடு

[கொழும்பு]

இராணுவத்தில் இருந்து தப்பியோடிய இராணுவ சிப்பாய் ஒருவர் கஞ்சாக் கடத்தலில் ஈடுபட்டமை கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது.

மொனறாகலையில் இருந்து கொழும்புக்கு சுமார் 80 கிலோ கஞ்சாவைக் கடத்திச் செல்லும்போது இவர் பொலிசாரிடம் பிடிபட்டுள்ளார். இவரை பொலிசார் விசாரித்த போது இராணுவத்தில் இருந்து தப்பியோடி நீண்டகாலமாக கஞ்சாக் கடத்தலில் ஈடுபட்டு வந்துள்ளார் என்பது தெரிய வந்துள்ளது.

### குற்ற ஒப்புதல் வாக்குமூலம் பெற்ற

## உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பலியானதால் எதிரி விடுதலை

[கொழும்பு]

குற்ற ஒப்புதல் வாக்குமூலம் பெற்ற உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் சரத்மகிந்த மேதின குண்டு வெடிப்பில் கொலையுண்டதால் எதிரி விடுதலை செய்யப்பட்டார். அக்கரைப்பற்றுவைச் சேர்ந்த சிவஞானம் வரதராஜா என்பவரே இவ்வாறு விடுதலையானவராவார்.

பொலிசாரைக் கொலை செய்தது. வெடிமருந்து வைத்திருந்தது, ஆயுதம் வைத்திருந்தது எனக் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டிருந்தது. வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது வாக்குமூலம் பெற்ற உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் கொலையுண்டதாகவும், வேறு தடயப் பொருள்கள் எதுவுமில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது

வழக்கை தொடர்ந்து நடத்த முடியாத நிலை ஏற்பட்டிருப்பதாக அரச தரப்பில் தெரிவிக்கப்பட்டதையடுத்து எதிரியை நீதிவான் விடுதலை செய்தார்.

## ஆரம்ப மருத்துவ பயிற்சி டிசம்பர் 12-ல் பரீட்சை

(கொழும்பு)

ஆரம்ப தர மருத்துவ உத்தியோகத்தர்களும் பல்மருத்துவ உத்தியோகத்தர்களுக்குமாக 500 பேர் மருத்துவ உத்தியோகத்தர் சேவையில் இரண்டாம் தரத்திற்கு பதவிஉயர்வு பெறும் தகுதியைப் பெற்றுள்ளனர்.

இவ்வாண்டு யூன், யூலை மாதம் சுகாதார அமைச்சு நடாத்திய பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் இவர்கள் இந்தத் தகுதியைப் பெற்றுள்ளனர்.

சகல பயிலுனர் மருத்துவ உத்தியோகத்தர்களும் அவர்களது சேவைப்பயிற்சிக் காலம் முடிவடைந்ததும் ஆரம்பதர மருத்துவ உத்தியோகத்தர்களாக நியமிக்கப்படுகின்றனர். இவர்கள் இரண்டாம் தரத்திற்கு பதவி உயர்வு பெறுவதற்கு திணைக்களம் நடாத்தும் பரீட்சையில்சித்தியடைய வேண்டும்

இதேவேளை திணைக்களத்தின் இவ்வாண்டுக்கான இரண்டாவது பரீட்சை டிசம்பர் 12-ம் திகதி நடைபெறும் எனவும் இதற்கான விண்ணப்பங்கள் இம்மாதம் 22-ம் திகதி முதல் அடுத்த மாதம் 8-ம் திகதி வரை ஏற்றுக் கொள்ளப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## ஜனாதிபதி, பிரதமர் கேட்டால் பதவி விலகத் தயார்

### அமைச்சர் ரணசிங்க தெரிவிப்பு

(கொழும்பு)

சுதந்திரக்கட்சியை விட்டு விலகியுள்ள அநுராபண்டாரநாயக்காவை ஐ. தே. க. எம்பியாக பாராளுமன்றத்திற்கு கொண்டுவர எனது எம். பி பதவியை துறக்கும்படி ஜனாதிபதியோ பிரதமரோ கேட்டால் எனது பதவியை விட்டு விலக தயாராக இருக்கின்றேன்'' என தகவல்துறை இராஜாங்க அமைச்சர் ஏ. ஜே

பேன் என அவர் மேலும் தெரிவித்தார். அநுரா சுதந்திரக்கட்சியிலிருந்து விலகியுள்ளதால் அவரின் கம்பஹா மாவட்ட எம். பி. பதவி நவம்பர் 11ஆம் திகதியுடன் முடிவடைகிறது இதன் பின் அவர் எம்பியாக நீடிக்கவேண்டுமானால் ஐ தே. க அவரை முறைப்படி சேர்த்து தேசிய பட்டியல் எம். பிகளில் ஒருவராக நியமிக்கவேண்டும் இத

## சுப்ரீம்கோர்ட் உத்தரவை விட பாதுகாப்பு செயலருக்கு மதிப்பு

### மேல்நீதிமன்ற நீதிபதி தெரிவிப்பு

[கொழும்பு]

இப்போது பொலிசார் மேல் நீதிமன்ற நீதிபதியின் கட்டளையைக் கூட மதிப்பதில்லை. நீதிமன்றத்தால் சிறைச்சாலைப் பகுதிக்கு மாற்றப்பட்ட ஒருவரை சிறைச்சாலை உத்தியோகத்தரிடம் ஒப்படைக்காமல் கண்டியிலிருந்து கொழும்புக்கு எவ்வாறு அழைத்துச் செல்லலாம். இவ்வாறு மலையக மக்கள் முன்னணியின் செயலாளர் பாவா அப்துல் காதருக்கு எதிரான வழக்கை விசாரிக்கும் மேல் நீதிமன்ற நீதிபதி சி. விக்னேஸ்வரன் கேள்வி எழுப்பினார்.

இவரதும் மலையக மக்கள் முன்னணியின் தலைவர் சந்திரசேகரன் மற்றும் வி. டி. தர்மலிங்கம் ஆகியோரதும் அடிப்படை மனித உரிமை மனுவை விசாரித்த உயர்நீதிமன்றம் குற்றப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்ட பின்னர் இவர்களை எங்கு தடுத்து வைப்பது என்பதைத் தீர்மானிக்கும் அதிகாரத்தை கண்டி மேல் நீதிமன்றத்திற்கு வழங்கியது. இதன் அடிப்படையில் 18-05-92இல் கண்டி மேல் நீதிமன்றம் இம் மூவரையும் கொழும்பு மகசீன் சிறைச்சாலைக்கு மாற்றுமாறு கட்டளையிட்டது. ஆனால் அவ்வாறு செய்யாமல் நியூ மகசீன் சிறைச்சாலைக்கு போய் பதிந்துவிட்டு ஆறாம் மாடிக்கே திரும்பவும் பொலிசார் அழைத்துச் சென்றது பற்றி நீதிமன்றத்தில் பொலீசாரிடம் சட்டத்தரணி கேள்வி எழுப்பினார்.

நீதிபதி: மேல் நீதிமன்ற உத்தரவு என்னவாயிற்று?

பொலிசார் தரப்பில் பதிலளித்த இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகத்தர் அல்விஸ் பதிலளித்தார்.

அல்விஸ்: பாதுகாப்புஅமைச்சின் செயலாளரின் புதிய தடுப்புக்காவல் கட்டளையின் படியே 6-ம் மாடிக்கு அழைத்துச் சென்றேன்.

நீதிபதி: நீர் எவ்வாறு கண்டியிலிருந்து கொழும்புக்கு அழைத்து செல்லலாம்.

அல்விஸ் கண்டி சிறைச்சாலை அத்தியட்சகர் கொழும்புக்கு இவர்களை அழைத்துச் செல்வதற்கு தம்மிடம் வாகனம் இல்லை என்றும் பாதுகாப்பு ஒரு பிரச்சனை என்றும் கூறி என்னிடம் இவர்களைகொழும்பு மகசீன்சிறைச்சாலையில் ஒப்படைக்குமாறு வேண்டினார்.

நீதிபதி; எழுத்து மூலம் தந்தாரா?

அல்விஸ்: இல்லை.

நீதிபதி: சிறைச்சாலை உத்தியோகத்தர் எவராவது துணையாக வந்தனரா?

அல்விஸ்; இல்லை. வரும் வழியில் கடுகண்ணாவையில் வைந்து கொழும்பு குற்றவியல் திணைக்கள வாகனமொன்றில் பாதுகாப்பு செயலாளரின் உத்தரவு கிடைத்தது. எனக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. நான் மகசீன் சிறைக்குப் போய் அவர்களுடன் இது பற்றி ஆலோசித்தேன். பதிந்துவிட்டு மேல்மாடிக்கு கொண்டு போகுமாறு கூறினர். அவ்வாறே செய்தேன்.

நீதிபதி: நீர் யாருடைய உத்தரவை நிறைவேற்றினீர், நீதிபதியினுடையதையா? பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் பணிப்புரையையா?

அல்விஸ்: நான் இரண்டையுமே நிறைவேற்றினேன்.

நீதிபதி; மிகவும் நல்லது. இன்று நாட்டில் இதுதான் நடக்கிறது. மேல் நீதிமன்ற உத்தரவைவிட சுப்ரீம்கோட் உத்தரவை விட பாதுகாப்பு செயலாளரின் உத்தரவுதான் பொலிசுக்குப் பெரிதாகப் படுகின்றது. இந்த விடயத்தை இத்துடன்விடப் போவதில்லை சட்ட வரையறைகள் மீறப்படுவதை இனியும் சகிக்க முடியாது என்றும் தெரிவிக்கப்பட்டது. மேல் விசாரணை எதிர்வரும் பத்தாம் திகதிக்கு ஒத்திவைக்கப் பட்டது.

## ஐ. தே. கட்சிக்காக அநுரா பிரசாரம் செய்வார்

''இன்னும் ஒரு சில தினங்களில் நான் ஜனாதிபதியைச் சந்தித்துப் பேச்சு வார்த்தை நடாத்தவுள்ளேன். அமைச்சரவையில் எனக்கு இடமளிப்பது என்பது ஜனாதிபதியின் கைகளிலேயே தங்கியுள்ளது'' இவ்வாறு லண்டனில் இருந்து நாடுதிரும்பிய திரு. அநுரா பண்டாரநாயக்கா பத்திரிகையாளர் மத்தியில் பேசும் போது தெரிவித்தார்.

நான் ஐக்கிய தேசியக்கட்சிக்காக மும்முரமாகப்பிரசாரம் செய்ய இருக்கிறேன். சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரினால் எனது ராஜினாமா குறித்து பாராளுமன்றச் செயலாளர் நாயகத்துக்கு அனுப்பி வைத்த கடிதம் சவப்பெட்டிக்கு அடிக்கப்பட்ட கடைசி ஆணியாகும் இதனுடன் சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன்இருக்கும் சந்தர்ப்பம் முடிந்து விட்டது. இக்கட்சி என்னை விரும்பவில்லை என்பது தான் இதன் அர்த்தம் என்றும் அநுரா பண்டாரநாயக்கா கூறினார்.

### அடையாளம் காட்டிப் பெறவும்

(யாழ்ப்பாணம்)

பயணிகள் போக்குவரத்து அலுவலகத்தில் கையளித்து மீளப்பெறப்படாமல் இருந்த இருவரது அனுமதி அட்டைகள் கிளிநொச்சி எம். ஆர். எஸ். அலுவலகத்தில் ஒப்படைக்கப் பட்டுள்ளது.

வவுனியா வீதி, அபிவிருத்தி திணைக்களத்தின் நிறைவேற்றுப் பொறியியலாளரான திரு. நடராசா வில்வநாயகம், மட்டக்களப்பு உயர்நீதிமன்றத்தில் கடமையாற்றும் கே. மங்கையர்க்கரசி ஆகியோரது அடையாள அட்டைகளே அவ்

### சட்டபூர்வ

பாடு, மற்றும் ஐக்கியம் என்பன பற்றி அமெரிக்க நிர்வாகம் கேள்வி எழுப்ப முனைகின்றதா என்றும் புதுடில்லியிலுள்ள அமெரிக்க தூதுவரிடம் வினாவப்பட்டுள்ளது.

இதேவேளை அமெரிக்காவின் இந்த அறிவிப்பு பாகிஸ்தானுக்கு ஆதரவான நன்கு திட்டமிடப்பட்ட ஒரு வெளிப்பாடு என்று புதுடில்லியிலுள்ள அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான உறவுகளைச் சுமுகமாக்குவதற்கு அமெரிக்க அதிகாரியின் இந்தக் கூற்று எந்த வகையிலும் துணை புரியவே செய்யாது என்றும் புதுடில்லியின் அரசாங்க வட்டாரங்கள் சுட்டிக் காட்டியுள்ளன.

### கடற்படை

ஆனால், டி. பி. விஜேதுங்கவின் இத்திட்டம் தற்பொழுது உதயமானதொன்றல்ல. மே மாதத்தில் பதவி ஏற்ற உடனேயே இது தொடர்பான நடவடிக்கையில் அவர் இறங்கியிருந்தார். பதவி ஏற்று குறுகிய காலத்திற்குள்ளேயே கிழக்கில் தேர்தல் நடத்துவது பற்றி படை அதிகாரிகளுடனும், தேர்தல் உதவி ஆணையாளர்களிடமும் அரசாங்கம் பேச்சு நடத்தி இருந்தது. ஆனால், சூழ்நிலை சரியாக இல்லை எனக் கைவிடப்பட்டது.

ஆனால், தற்பொழுது மீண்டும் ஜனவரியில் தேர்தல் நடத்துவது பற்றி டி பி. விஜேதுங்க வற்புறுத்தத் தொடங்கியுள்ளார். அவர் கூறுவது போன்று 'தேர்தல்' என்ற பெயரில் ஒன்றுநடத்துவது முடியாத காரியமுமல்ல. இராணுவத்தின் உதவியுடன் தேர்தலை எவ்வாறு நடத்துதல், தேர்தலை எவ்வாறு குழப்பி அடித்தல் போன்றவற்றில் அனுபவம் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்திற்குப் போதிய அளவில் உள்ளது.

இந்நிலையில், கிழக்கில் 'தேர்தலை' நடத்துவதும், அதில் வெற்றி பெறுவதும் பெரியதொரு விடயமல்ல. அதாவது, புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளைத் தவிர்த்து, துப்பாக்கி முனையில் மக்களை மிரட்டி, ஒரு தேர்தலை நடத்த முடியும். அத்தோடு, அத்தேர்தலில் குழப்பத்தை ஏற்படுத்தி களவாக வாக்கு போட்டு ஜெயிக்கவும் முடியும். சிலவேளை கள்ள வாக்குகள் இன்றியே வெற்றி பெறினும் கூட ஆச்சரியப்பட ஏதுமில்லை.

ஏனெனில், கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு தவிர திருமலை, அம்பாறை மாவட்டங்களில் தமிழ்மக்கள் தற்பொழுது பெரும்பான்மையாக இல்லை தமிழர்களின் தாயகப் பகுதியானது ஏற்கனவே சிங்கள அரசாங்கத்தால்ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. சிங்கள குடியேற்றவாசிகள்நிலத்தை கபளிகரம் செய்துள்ளனர். இந்நிலையில் கருத்துக் கணிப்பில் சிங்கள அரசு வெற்றி பெறும் வாய்ப்புக்கள் அதிகமுண்டு.

ஆனால், சிங்கள அரசு இவ்வாறு பெறும் வெற்றியானது இனப்பிரச்சினைக்குத் தீர்வையோ அன்றி சமாதானச் சூழ்நிலையையோ உருவாக்கப் போவதில்லை. அத்தோடு, நியாயமான தேர்தலாகவோ கருத்துக்கணிப்பாகவோ இது கருதப்படப் போவதும் இல்லை.

ஏனெனில், கிழக்கு மாகாணத்தில் வாழ்ந்த தமிழர்களில் அநேகர் அங்கிருந்து வெளியேறியுள்ளனர். இவ்வாறு வெளியேறியவர்கள் யாழ். குடாநாட்டில் இருந்து கொழும்பு முதற்கொண்டு மேற்குலகின் பல நாடுகளிலும் பரவியுள்ளனர். இந்தியாவிலும் கணிசமான தொகையினர் உள்ளனர்.

அத்தோடு, சிங்கள அரசையும், இராணுவத்தையும் எதிர்த்துப்போராடி வரும் விடுதலைப்புலிகள் மாத்திரமல்ல, கொழும்பிலுள்ள தமிழ்க் குழுக்களும், கட்சிகளும் கூட இத்தேர்தலை எதிர்க்கின்றன. தேர்தல் நடத்துவதற்கான சூழ்நிலை இல்லை என்றும், தேர்தலில் பங்குபற்றப்போவதில்லை எனவும் அறிவித்துள்ளன. இருப்பினும் தேர்தலை நடத்துவதிலேயே டி. பி. விஜேதுங்க விடாப் பிடியாக உள்ளதுபோல் தெரிகிறது.

ஆனால் டி. பி. விஜேதுங்கவின் இத்திட்டமானது கிழக்கில் போரை முடிவிற்குக் கொண்டுவரப் போவதில்லை. 'தேர்தல்' முடிவின்படி தமிழர் தாயகத்தை துண்டாடி விட்டது குறித்து டி. பி. விஜேதுங்க பெருமை கொள்ளலாம். இதன் காரணமாக அடுத்த ஜனாதிபதி வேட்பாளராகவும், ஜனாதிபதியாகவும்கூட அவர் தெரிவாகலாம். ஆனால், இதற்காக அவர் கொடுத்த விலை இலங்கையில் அமைதி என்பதை எட்ட முடியா ததூரத்திற்கு விரட்டியதாகவே இருக்கும்.

---

பேறுகளின் அடிப்படையில் இவர்கள் இந்தத் தகுதியைப் பெற்றுள்ளனர்.

சகல பயிலுனர் மருத்துவ உத்தியோகத்தர்களும் அவர்களது சேவைப்பயிற்சிக் காலம் ... வும் இதற்கான விண்ணப்பங்கள் இம்மாதம் 22-ம் திகதி முதல் அடுத்த மாதம் 8-ம் திகதி வரை ஏற்றுக் கொள்ளப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# ஜனாதிபதி, பிரதமர்கேட்டால் பதவி விலகத் தயார்

## அமைச்சர் ரணசிங்க தெரிவிப்பு

(கொழும்பு)

சுதந்திரக்கட்சியை விட்டு விலகியுள்ள அநுராபண்டார நாயக்காவை ஐ. தே. க. எம்பியாக பாராளுமன்றத்திற்கு கொண்டுவர எனது எம்.பி பதவியை துறக்கும்படி ஜனாதிபதியோ பிரதமரோ கேட்டால் எனது பதவியை விட்டு விலக தயாராக இருக்கின்றேன்'' என தகவல்துறை இராஜாங்க அமைச்சர் ஏ.ஜே ரணசிங்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி அல்லது பிரதமர் கேட்டுக்கொண்டால் மட்டுமே எம்.பி பதவியை துறப்பேன் என அவர் மேலும் தெரிவித்தார். அநுரா சுதந்திரக்கட்சியிலிருந்து விலகியுள்ளதால் அவரின் கம்பஹா மாவட்ட எம் பி. பதவி நவம்பர் 11ஆம் திகதியுடன் முடிவடைகிறது இதன் பின் அவர் எம்பியாக நீடிக்கவேண்டுமானால் ஐ தே.க அவரை முறைப்படி சேர்த்து தேசிய பட்டியல் எம்.பிகளில் ஒருவராக நியமிக்கவேண்டும் இதற்கு இடமளிக்கும் வகையில் ஐ. தே. க. தேசியப்பட்டியல் எம் பி ஒருவர் பதவி துறக்க வேண்டும்.

# விதை உருளைக்கிழங்கு அடுத்தமாதம் விநியோகம்

(நமது நிருபர்)

யாழ் விவசாயிகளுக்குத் தேவையான விதை உருளைக் கிழங்கு அடுத்த மாதமளவில் விநியோகிக்கப்பட வுள் ளது.

கொலன்ட் நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ள இவ்விதை உருளைக்கிழங்கு இன்று கொழும்பு துறைமுகத்தை வந்தடையவுள்ளது.

இதில் யாழ். மாவட்டத்திற்கு தேவையான கிழங்கு அடுத்த மாதநடுப்பகுதியில் றுகுணு கப்பல் மூலம் இங்கு எடுத்துவரப்படும் எனவும் அதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அரச அதிபர் தெரிவித்தார்.

# நவம்பர்-7 கொல்லப்பட்ட படையினர் நினைவுதினம்

(கொழும்பு)

போரில் கொல்லப்பட்ட படையினரின் நினைவு தினமாக நவம்பர் 7-ம் திகதியை அனுஷ்டிக்குமாறு பாதுகாப்பு இராஜாங்க அமைச்சின் செயலாளர் சகல அரச, மாகாண நிறுவனங்களை பணித்துள்ளார்.

அன்றைய தினம் காலை 8 மணிமுதல் சகல நகரங்களிலும் ஞாபகார்த்த வைபவங்களை ஒழுங்கு செய்யும்படி அவர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை கோரியுள்ளார்.

---

**இந்திய**

இருக்கக் கூடாது என அவர் கூறினார். காஷ்மீர் இந்தியாவுடன் இணைக்கப்பட்டமை ரெக்ஸாசும் நியூமெக்சிகோவும் அமெரிக்காவுடன் சேர்க்கப்பட்டதுபோல் சட்டபூர்வ செயல் என ஜனதா கட்சி தலைவர் சுப்பிரமணியம் சுவாமி கூறினார்.

இந்திய உள்விவகாரத்தில் இது தேவையற்ற ஏற்கமுடியா தலையீடு என பாரதீய ஜனதா கட்சி கூறியுள்ளது.

**வடக்கிலிருந்து**

அந்தசிகிச்சையை அளிப்பேன்.

''இந்த நாடு ஒற்றையாட்சிக்கு உட்பட்டது. நாடு பிளவுபடுவதை அனுமதிக்க முடியாது. வடக்கிலிருந்து கிழக்கைப் பிரித்துவிட்டால் பிரபாகரனைக் கூப்பிட்டுப் பேசலாம் இது முடியாவிட்டால் வேறு தகுந்த நடவடிக்கை எடுக்கலாம்'' என மேலும் தெரிவித்தார்.

**பல்கலை**

வென மானியங்களின் ஆணைக்குழுவின் நிலையியற் குழு பல்கலைக் கழக மாணவர்களுக்கு உபவேந்தருடாக விடுத்த அழைப்பை அடுத்தே இம்மாணவர் குழுவினர் கொழும்பு செல்கின்றனர் எனவும்இவ்வாறான அழைப்புகள் சகல பல்கலைக் கழகங்களினதும் மாணவர் குழுக்களுக்கு விடுக்கப்பட்டுள்ளது எனவும் தெரிய வருகிறது. (05)

**இந்தியப பாகிஸ்**

குறித்து அமெரிக்க அதிகாரி ஒருவர் வெளியிட்ட கருத்து பற்றி குறிப்பிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

---

நத்தில் பொலிசாரிடம் சட்டத்தரணி கேள்வி எழுப்பினார்.

நீதிபதி: மேல் நீதிமன்ற

**அடையாளம் காட்டிப் பெறவும்**

(யாழ்ப்பாணம்)

பயணிகள் போக்குவரத்து அலுவலகத்தில் கையளித்து மீளப்பெறப்படாமல் இருந்த இருவரது அனுமதி அட்டைகள் கிளிநொச்சி எம். ஆர். எஸ். அலுவலகத்தில் ஒப்படைக்கப் பட்டுள்ளது.

வவுனியா வீதி, அபிவிருத்தி திணைக்களத்தின் நிறைவேற்றுப் பொறியியலாளரான திரு. நடராசா வில்வநாயகம், மட்டக்களப்பு உயர்நீதிமன்றத்தில் கடமையாற்றும் கே. மங்கையர்க்கரசி ஆகியோரது அடையாள அட்டைகளே அவ் அலுவலகத்தில் ஒப்படைக்கப் பட்டுள்ளன. உரியவர்கள் அடையாளம் காட்டிப் பெற்றுக் கொள்ளலாம்.

**யுத்தக்கைதிகள்**

வானொலிக்கு தெரிவித்தனர்.

சிறிலங்கா அரசுதான் வழங்கியஉறுதிமொழியைகைவிட்டதனால் விடுதலை கிட்டாது போன இந்த கைதிகளை நேரில்சந்தித்த போது அவர்கள் இக்கருத்துக்களை தெரிவித்தனர்.

''அவர்கள் எம்முடன் சுதந்திரமான முறையில் உரையாடினர் இந்த பொருளாதாரத் தடையினால் விடுதலைப்புலிகள் எதுவிதத்திலும் பாதிக்கப்படவில்லை பாதிக்கப்படுவது பொதுமக்கள் தான் என அவர்கள் கூறுகின்றனர்.

வடபகுதி மக்கள் பெரும் துன்பப்படுகின்றனர் தமது இவ்வாறானஇனவாதச் செயற்பாட்டினால் எரிகின்ற நெருப்பிற்கு எண்ணெய் விடுவதுபோல் நடக்கிறார்கள்என வும் கவலை தெரிவித்தனர்'' என 'ராவய' செய்தியாளர்கள் விளக்கினர்.

**கப்பல்**

வேண்டியிருந்தது.

இது தொடர்பாக யாழ். அரசாங்க அதிபர் கா. மாணிக்கவாசகர் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளருக்கு சமர்ப்பித்த மகஜரைக்கருத்தில் கொண்டு பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் அனுமதியுடன் இக்கட்டணம் அறவிடுவதை நிறுத்த அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் கொள்கையளவில் சம்மதித்துள்ளார்.

இக்கட்டணத்தை அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் முதல் நிறுத்த நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்த அவர் கூட்டுறவுசங்கங்களின் பொருள்களுக்கு மட்டுமே இக்கட்டணங்கள் நிறுத்தப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

(க)(நி)

---

பாடு, மற்றும் ஐக்கியம் என்பன பற்றி அமெரிக்க நிர்வாகம் கேள்வி எழுப்ப முனைகின்றதா என்றும் புதுடில்லியிலுள்ள அமெரிக்க தூதுவரிடம் வினாவப்பட்டுள்ளது.

இதேவேளை அமெரிக்காவின் இந்த அறிவிப்பு பாகிஸ்தானுக்கு ஆதரவான நன்கு திட்டமிடப்பட்ட ஒரு வெளிப்பாடு என்று புதுடில்லியிலுள்ள அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான உறவுகளைச் சுமுகமாக்குவதற்கு அமெரிக்க அதிகாரியின் இந்தக் கூற்று எந்த வகையிலும் துணை புரியவே செய்யாது என்றும் புதுடில்லியின் அரசாங்க வட்டாரங்கள் சுட்டிக் காட்டியுள்ளன.

**கடற்படை**

பட்டிருப்பதாவது; கடற்படைத் தளம் அமைப்பது தொடர்பான மேற்படி ஒப்பந்தத்தில் குறிக்கப்பட்டிருந்த கால எல்லை பல தடவை நீடிக்கப்பட்டுள்ளது. அத்துடன் ஒப்பந்தத்தில் கூறப்பட்டதைவிட மேலதிகமாக பல மில்லியன் ரூபா வழங்கப்பட்டிருக்கிறது.

மேலும் மேற்படி ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட ஒப்பந்தகாரரை எக்காரணம் கொண்டும் நீக்க வேண்டாம் என்று ஜனாதிபதி திரு. டி.பி. விஜேதுங்கா கடுமையான உத்தரவு பிறப்பித்திருக்கிறார். இது தொடர்பாக ஜனாதிபதியின் செயலாளர் திரு. கே. எம். ஜே. விஜயதாசாவினால் ஒப்பமிடப்பட்ட கடிதம் ஒன்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளரான ஹமில்டன் வனசிங்காவுக்கு ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்டுள்ளது

இத் துறைமுகத்தில் அமையவிருக்கும் இப் புதிய கடற்படைத் தளத்தை அமைப்பதற்கு ஆரம்பத்தில் சுமார் 256 மில்லியன் ரூபாவுக்கே ஒப்பந்தத்தில் கைச்சாத்திடப்பட்டது. ஆனால் இன்றுவரை வேலைகள் பூரணப்படுத்தப் படவில்லை. சுமார் 40 வீதமான வேலைகளே இதுவரை முடிவடைந்துள்ளது.

இவ் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட சி. டி. ஈ. என்ற நிறுவனம் சுமார் இரண்டு வருடங்களில் மேற்படி தளத்தை அமைப்பதற்கு ஒப்புக் கொண்டிருந்தது ஆனால் இக் கால எல்லை பல மாதங்கள் பின்னர் நீடிக்கப்பட்டது. இவற்றைவிட ஒப்பந்தத்தில் கூறப்பட்டதற்கு மேலதிகமாக சுமார் 100 மில்லியன் ரூபாவுக்கு மேற்பட்ட பெறுமதியுடைய கட்டடப் பொருள்கள் இந்த நிறுவனத்துக்கு வழங்கப்பட்டுள்ளது. இது பாதுகாப்பு அமைச்சின் விசேட அதிகாரத்தின் கீழ் வழங்கப்பட்டதாக கடற்படை வட்டாரங்கள் கருத்து வெளியிட்டதாகவும் கூறப்படுகிறது.

---

கைகளிலேயே தங்கியுள்ளது'' இவ்வாறு லண்டனில் இருந்து நாடுதிரும்பிய திரு. அநுரா பண்டாரநாயக்கா பத்திரிகையாளர் மந்தியில் பேசும் போது தெரிவித்தார்.

நான் ஐக்கிய தேசியக்கட்சிக்காக மும்முரமாகப்பிரசாரம் செய்ய இருக்கிறேன். சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரினால் எனது ராஜினாமா குறித்து பாராளுமன்றச் செயலாளர் நாயகத்துக்கு அனுப்பி வைத்த கடிதம் சவப்பெட்டிக்கு அடிக்கப்பட்ட கடைசி ஆணியாகும் இதனுடன் சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன்இருக்கும் சந்தர்ப்பம் முடிந்து விட்டது. இக் கட்சி என்னை விரும்பவில்லை என்பது தான் இதன் அர்த்தம் என்றும் அநுரா பண்டாரநாயக்கா கூறினார்.

**அன்றாட**

இருபத்தி ஐந்து கிளைகளிலும் திறமையாக சேவையைச் செய்த கிளை யாழ். செஞ்சிலுவைச் சங்க கிளைதான். இதன் உப தலைவர் திரு. புவனேந்திரம் உலங்கு வானூர்தி தாக்குதலின்போது மரணமானார்.

உலங்கு வானூர்தி தாக்குதல் நடத்திக்கொண்டு இருந்த போது இதில் காயமடைந்தவர்களை அம்புலன்ஸ் வண்டியில் ஏற்றி கொண்டு செல்லும் சமயத்தில் தான் உலங்கு வானூர்தி தாக்குதலில் கொல்லப்பட்டார்.

இதற்கு இராணுவத்தினர் கூறுகின்றார்கள் வாகனத்தின் மேல் பகுதியில் இந்த செஞ்சிலுவை அடையாளம் இல்லாததினால் தான் உலங்கு வானூர்தி தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக, ஆனால் செஞ்சிலுவை சங்க பிரதிநிதிகள் செஞ்சிலுவை வாகனம் என்பதை வானில் இருந்து பார்க்க கூடியவிதத்தில் அடையாளங்கள் அமைந்திருந்ததாகவும், மின்விளக்கும் போடப்பட்டு காட்டப்பட்டதாகவும் தெரிவிக்கின்றனர்.

இந்த யுத்தத்தில் நாம் ஒரு பக்கம் சாரமாட்டோம். எமது பணி பாதிக்கப்பட்டவர்களுக்கும், துன்பப்படுபவர்களுக்கும், பட்டினியாக இருப்பவர்களுக்கும் நோய்வாய்ப்பட்டுள்ளவர்களுக்கும்எம்மால் இயன்றஉதவியை செய்வதாகும்.

எனவே உலகில் உள்ள செஞ்சிலுவைச் சங்கங்களிடமும், ஏனைய நிறுவனங்களிடமும் இதற்கான உதவியை நாம் எதிர் பார்க்கின்றோம். நாம் நடமாடும் மருத்துவ சுகாதார சேவையை ஆரம்பித்துள்ளோம். அதனைஅங்கு விரிவு படுத்த வேண்டும் அதை தொடர்ந்து இராணுவ நடவடிக்கையினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தற்காலிக வீடுகளை அமைத்து பிள்ளைகளின் கல்விக்கு உதவ வேண்டிய நிலை எமக்குள்ளது என தெரிவித்தார்.

விராட்விஸ்வப் பிரம்மனே நம

# திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான ஸ்ரீமுக வருடம் ஐப்பசித் திங்கள் புதன்கிழமை 18ஆம் நாள் (03-11-1993) முற்பகல் 9.14 மணிமுதல் 11.22 வரையுமுள்ள தனுலக்கினமும் மிருகசீரிட நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய சுபமுகூர்த்த வேளையில்

திருநிறைச்செல்வன்
சின்னையா பத்தர்
**நடேசமூர்த்தி**
(கனடா)
அவர்களுக்கும்

எனது புத்திரி
திருநிறைச்செல்வி
துரைராஜசிங்கம்
**சாந்தினி**
அவர்களுக்கும்

திருமாங்கல்ய தாரணம் வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள் ஆலயத்தில் நடைபெற பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சமேதராய் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

(இரு வீட்டார் அழைப்பு)
இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்

மைத்துனர்மார், சகோதரர்கள்
(இத்தியடி பிள்ளையார் கோவிலடி
பொற்கொல்லர் வீதி,
சங்கத்தானை, சாவகச்சேரி.

திரு. திருமதி
அ. துரைராஜசிங்கம் பத்தர்
குடும்பத்தினர்
16/3, சீனியர் ஒழுங்கை, கலட்டி,
வண்ணார்பண்ணை.

(6442)


## தஞ்சாவூரில் வருடஇறுதியில் தமிழாராய்ச்சி மாநாடு

(சென்னை)

8ஆவது அனைத்துலக தமிழாராய்ச்சி மாநாடு டிசம்பர் 25ஆம் திகதி தஞ்சாவூரில் ஆரம்பமாகிறது. மாநாடு தொடர்ந்து 10 நாட்களுக்கு நடைபெறும். இத் தகவலை தஞ்சாவூர் தமிழ்ப்பல்கலைக் கழக துணைவேந்தர் அவ்வை நடராஜன் தெரிவித்துள்ளார்.

மாநாட்டுக்கு ஆராய்ச்சி கட்டுரைகளை அனுப்ப விரும்புவோர் அவற்றினை நவம்பர் 15ஆம் திகதிக்கு முன் அனுப்பும்படியும் அவர் கோரியுள்ளார்.

## சட்டப்பேரவை கூட்டத்திலிருந்து இ. காங்கிரஸ் வெளிநடப்பு

தமிழக சட்டப்பேரவையின் மழைக்கால கூட்டத்தொடரின் இறுதி நாளான நேற்று முன் தினம் காங்கிரஸ் கட்சியினர் வெளிநடப்புசெய்தனர்.

துணை நிதி நிலைஅறிக்கையின் மீது எதிர்க்கட்சித் தலைவர் எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் உரையாற்றிய போதுமுதலமைச்சர் உட்பட அமைச்சர்கள்சிலர் அடிக்கடி குறுக்கிட்டதாலும் ஆளும்கட்சியினர் கூச்சல்எழுப்பி அவரை பேச விடாதுதடுத்ததையும் சுட்டிக் காட்டியே அக்கட்சியினர் வெளிநடப்பு செய்தனர்.

## பாடசாலைகளுக்கு இடையே உதைபந்தாட்டப்போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டப் பாடசாலை மாணவர்களுக்கிடையிலான உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் 15 வயதுப் பிரிவினரிற்கான போட்டிகளில் நாளை நடைபெறவுள்ள போட்டிகளின் விபரம் வருமாறு; இப்போட்டிகள் மாலை 2. 30மணிக்கு ஆரம்பமாகும்.

யாழ். இந்துக்கல்லூரி மைதானத்தில், உரும்பராய் இந்துவை எதிர்த்து புங்குடுதீவு ம.வி.'மும், இளவாலை ம. வி.யை எதிர்த்து ஸ்கந்தவரோதயாக்கல்லூரியும், நெல்லியடி மத்திய ம. வி. மைதானத்தில், யூனியன் கல்லூரியை எதிர்த்து தேவரையாளி இந்துவும், கனகரத்தினம் ம ம. வி.யை எதிர்த்து உடுப்பிட்டி அ. மி. கவும், மட்டுவில் ம வி. மைதானத்தில், மட்டுவில் மகா வித்தியாலயத்தை எதிர்த்து ஏழாலை ஸ்ரீமுருகனும், சாவகச்சேரி இந்துவை எதிர்த்து புனிதஜேம்ஸ் ம. வி. மும், சண்டிலிப்பாய் இந்துவை எதிர்த்து புங்குடுதீவு சண்முகானந்தாவும் மோதவுள்ளன.

## சஞ்சிகை வெளியீடு

ஊரெழு கலைவாணி சனசமூக நிலையம் தனது காலாண்டு சஞ்சிகையான ''செவ்வந்தி'' கையெழுத்துப் பிரதியினை இன்று மாலை3-30மணிக்கு ஊரெழு கணேச வித்தியாசாலை மண்டபத்தில் வெளியிட உள்ளது.

## ஏகாதசித் திருவிழா

(குருநகர்)

அளவெட்டி தெற்கு நாகேஸ்வரம் சிறி நாகவரத நாராயணர் தேவஸ்தானத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை ஏகாதசித் தீர்த்த விழா சிறப்பாக நடைபெற்றது.

விசேட அபிஷே ஆராதனைகளை அடுத்து சிறிநாகவரத நாராயண சுவாமி திருவீதி எழுந்தருளினார். (21)

## விளையாட்டு போட்டி

(தென்மராட்சி)

விடுதலைப்புலிகளின் மகளிர் அமைப்பு சமூக மேம்பாட்டுப் பிரிவால் நடாத்தப்பட்டுவரும் விளையாட்டுப் போட்டி கல்வ


## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள் 30.10.93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்

42-0849, 42 2397, 28-2829, 26-9658, 4
41 9579, 22-3611, 24 9645' 28-3233, 26
42-2151, 27-1375, 26-2979, 26 4450, 26-
24-5069, 24-5721, 24-2496, 26-4691, 27-

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்

26-6796, 24-7992, 26 4443, 24-5734, 24
43-2666, 24 5707, 24 9744, 43-6007, 24
26-2421, 24 4265, 42-3368, 28-2024, 22
24-5774, 24-8603, 42 9345, 28 6784, 43
26-0535, 40-0770, 27-5217, 41-6933, 26
27 9719, 24 6211, 28 5862.

## ஹட்டன் நஷனல் வங்

இதுவரை காலமும்
54, ஸ்ரான்லி வீதியில் இயங்கிவந்த
ஹட்டன் நஷனல் வங்கி
நாளை 01-11-93 திங்கட்கிழமை தொ
212-214 ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்
என்ற முகவரியில் இயங்கும்
என்பதை எமது வாடிக்கையா
களுக்கும் பொது மக்களுக்கும்
யத்தருகிறோம்.

முகாமையா
ஹட்டன் நஷனல்
யாழ்ப்பாண

(சி-7902)


## மரண அறிவித்தல்க

திருமதி
**அன்னம் மயில்வாகன**
(கொக்குவில்)

கொக்குவிலை பிறப்பிடமாக கொண்ட தி
அன்னம் மயில்வாகனம் 30 10 93இல் காலமா
அன்னார் காலஞ்சென்ற மயில்வாகனத்தின் அன்பு
வியும், ஞானாம்பிகை, சிவசுப்பிரமணியம், கன
பிகை, காலஞ்சென்ற மகேந்திரன், மாணிக்கவா
இராஜலக்சுமி, விஜயநாதன் (Canada), ரட்ண
ராஜரட்ணம் (U.K) ஆகியோரின் அன்புத்தாயும்
வாசகன், அதிசயமலர் காலஞ்சென்ற திருநாவு
இந்திராதேவி, ஜெபலக்சுமி, சிறீகாந்தன், அம்
(Canada), ராணி, பவுசியா (U. K) ஆகியோரின்
மாமியும் தாரிணி சுதர்சன் U.K), ஜெனந்தன் (Nor
சிவானி, ஷாமினி, ஹரேந்திரா (U.K), சுரேஸ்


ஒக்ரோபர் மாதம்
உலகை வலம் வந்து விட்டீர்களா?

விற்பனையாகின்றது



வாங்கிப் படியுங்கள்!!

உலகினை வலம்வந்த

உலக உலா

உலகை வலம் வந்து விட்டீர்களா?

விற்பனையாகின்றது

வாங்கிப் படியுங்கள்!!



உலகினை வலம்வந்த
உணர்வினைப் பெறுவீர்கள்

- நியூஸ் வீக், ஏசியாவீக், ரைம், போப்பியூலர் சயன்ஸ் போன்ற அனைத்துலக ஆங்கிலச் சஞ்சிகைகளின் அரிய கட்டுரைகள்
- உலக சமூக அரசியல் விஞ்ஞான தொழிநுட்பச் செய்திகள்
- தமிழீழ ஏடுகள் எவற்றிலுமே வெளிவராத அரிதான விடயங்கள்

அறிவினை வளர்க்கும் அருமையான செய்திகளை
ஆய்வுக் கட்டுரைகளை அழகு தமிழிலே மாதாந்தம் தருவது

# உலக உலா



- உலக விவகாரங்கள்
- செய்திச் சரங்கள்
- புதிய விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள்
- மருத்துவசாதனைகள்
- தொழில்நுட்ப வியப்புகள்
- சமூகவியல்
- மனிதவியல் வரலாறு
- விண்வெளி அறிவியல்
- சுற்றுச் சூழல்
- குற்றவியல்

இன்னும்பல! இன்னும்பல!!

பொது அறிவுக் களஞ்சியமாகப் பைந்தமிழிலே மலர்கிறது

# உலக உலா

★ யாழ். மாவட்டத்திலுள்ள அனைத்துப் புத்தகக் கடைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்

(சி-7811)

ஏகாதசித் திருவிழா

(குருநகர்)

அளவெட்டி தெற்கு நாகேஸ்வரம் சிறிநாகவரத நாராயணர் தேவஸ்தானத்தில் கடந்த செவ்வாய்க் கிழமை ஏகாதசித் தீர்த்த விழா சிறப்பாக நடைபெற்றது.

விசேட அபிஷேக ஆராதனைகளை அடுத்து சிறிநாகவரத நாராயண சுவாமி திருவீதி எழுந்தருளினார். (21)

## விளையாட்டு போட்டி

(தென்மராட்சி)

விடுதலைப்புலிகளின் மகளிர் அமைப்பு சமூக மேம்பாட்டுப் பிரிவால் நடாத்தப்பட்டுவரும் விளையாட்டுப் போட்டி கல்வயல் கண்ணன் பாலர் பாடசாலையில் இன்று பி. பகல் 2. 00 மணிக்கு நடைபெறும். (86)

## மனையியல் கண்காட்சி

(தென்மராட்சி)

யாழ். மாவட்ட தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் மனையியல் கண்காட்சி ஒன்று இன்று காலை 10 00 மணிக்கு யா/வீரசிங்கம் மகாவித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது. (86)

சம்பளக்கொடுப்பனவு

காங்கேசன் சீமெந்து தொழிற்சாலை ஊழியர்களின் ஐப்பசிமாதச் சம்பளக் கொடுப்பனவு நாளை தொடக்கம் இரண்டு நாட்கள் வர்த்தக வங்கியில் வழங்கப்படும் என பிரதம கணக்காளர் அறியத் தருகிறார்.

தமிழ்ப்பாட
கல்விக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் மார்கழி மாதம் நடைபெறவுள்ள க. பொ. த சா /தர. பரீட்சை மாணவர்களுக்கான தமிழ்ப்பாடக் கருத்தரங்குகள் மாற்றம் சஞ்சிகையினரினால் நடத்தப்பட்டு வருகின்றது

இக் கருத்தரங்கின் இரண்டாம் அமர்வு யாழ். சுண்டிகுளி மகளிர் கல்லூரியில் நாளை திங்கட்கிழமை காலை 9-00 மணிக்கு நடைபெறவுள்ளது.

இக் கருத்தரங்கில் யாழ். கன்னியர்மடம் மகாவித்தியாலயம், யாழ். திருக்குடும்ப கன்னியர்மடம், யாழ் சுண்டிக்குளி மகளிர் கல்லூரி ஆகிய பாடசாலைகள் கலந்துகொள்கின்றன.

# மரண அறிவித்தல்க

திருமதி

## அன்னம் மயில்வாகன

(கொக்குவில்)

கொக்குவிலை பிறப்பிடமாக கொண்ட தி அன்னம் மயில்வாகனம் 30 10 93இல் காலமா அன்னார் காலஞ்சென்ற மயில்வாகனத்தின் அன்பு வியும், ஞானாம்பிகை, சிவசுப்பிரமணியம், கன பிகை, காலஞ்சென்ற மகேந்திரன், மாணிக்கவா இராஜலக்சுமி, விஜயநாதன் (Canada), ரட்ண ராஜரட்ணம் (U.K) ஆகியோரின் அன்புத்தாயும் வாசகன், அதிசயமலர் காலஞ்சென்ற திருநாவு இந்திராதேவி, ஜெபலக்சுமி, சிறீகாந்தன், அம் (Canada), ராணி, பவுசியா (U. K) ஆகியோரின் மாமியும் தாரிணி சுதர்சன் U.K), ஜெனந்தன் (Nor சிவானி, ஷாமினி, ஹறேந்திரா (U.K), சுரேஸ் திரா (Canada), நரேந்திரா Canada), ரவீந்திரா (Canada), கல்பனா (U. K), சாதனா, றமேஸ் (U.K), சங்கர் (U. K) சோபனா-மயூரன் (Canada), வாசுகி, தனுஜன், டிலீப் (U.K), சுரயா (U K) ஆகியோரின் அன்புப் பேத்தியுமாவார். அன்னாரின் இறுதி கிரியைகள் 31-10-93(இன்று) காலை 11 மணிக்கு ''நாகரத்தின வில்லா'' K. K. S வீதி கொக்குவிலில் நடைபெற கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யபபடு இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை ரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

கொக்குவில். ம. மாணிக்கவாச

(6444) (மகன்)

## இராசசிங்கர் பொன்னுத்துரை

சுப்பினான் முத்தர் வளவை பிறப்பிடமாகக் கொ டவரும் தற்போது உரும்பராயில் வசித்தவருமாகிய இரா சிங்கர்பொன்னுத்துரை 30-10 93 ல் காலமாகிவிட்டார் இவர் இராசசிங்கர்-தங்கச்சிப்பிள்ளையின் அன்புமகனு வள்ளியம்மையின் அன்புக்கணவரும், காலஞ்சென்ற மணி, செல்லம்மா, சின்னத்துரை, அப்புத்துரை, இ ரத்தினம் (I. P. T) ஆகியோரின் சகோதரனும் ஆவா இவர் தங்கவடிவேல் (நில அளவையாளர் சவூதி), ராஜா, பாலசுப்பிரமணியம் (எலக்றிக்கல் போமன் தங்கமணி, தவமணி (ஆசிரியர்), கணேஸ்வரி, நாகர னம் (டென்மார்க்), சக்திவடிவேல் (கனடா) ஆகியோ தந்தையாரும் ஆவார். இவர் காலஞ்சென்ற கமலாதே புவனேஸ்வரி, காலஞ் சென்ற கனகசபை, உருத்திரலிங் (கனடா), ஆனந்தன் (CO-OP கிளாக்), விக்னேஸ்வ ஆகியோரின் பாசமிகு மாமனாரும், லதா, சுமதி, சியாமலா, லம்போதரன் (கனடா) ஞானகிருஷ்ணன் (கனடா) சிவப்பிரியா, சேரமான், உதயசூரியன் (கனடா), மயூர செந்தூரன், சஞ்சீவன், கபிலன், கமலவாணி, மேனக மேனரூபன் ஆகியோரின் பேரனும் ஆவார். அன் ரின் இறுதிக் கிரியைகள் (31 10 93) ஞாயிறு 12 30 ம க்கு உரும்பராயில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெ தகனக் கிரியைக்காக உரும்பராய் மயானத்திற்கு எ துச் செல்லப்படும் இவ்வறிவித்தலை உற்றார், உறவி நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

பழைய தபாற் கந்தோர் வீதி, பொ. நடரா
உரும்பராய் தெற்கு உரும்பராய்.

(6445)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1993 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 31ஆம் திகதி அச்சிட்டு வெளியிட